

# மகாபாரதம்

இந்திய பாரதத்தின் இரண்டு இதிகாசங்களுள் ஒன்று மகாபாரதம். மகாபாரதம், உலகின் மிக நீண்ட இதிகாசங்களில் ஒன்றாகும்.

நவீன இந்து சமயத்தின் முக்கிய நூல்களில் ஒன்றான பகவத் கீதையும், இந்த இதிகாசத்தின் ஒரு பகுதியே. பாண்டு, திருதிராஷ்டிரன் என்னும் இரு சகோதரர்களின் பிள்ளைகளிடையே இடம்பெற்ற பெரிய போரை மையமாக வைத்து உருவாக்கப்பட்டதே இந்த காப்பியமாகும்.

மனித வாழ்க்கையில் ஒருவன் அறநெறி மற்றும் ஒழுக்கத்தோடு வாழும் முறையை பற்றி கூறுவதே இக்கதையின் நோக்கமாகும். மேலும், மனிதன் எந்த நேரத்திலும் தருமத்தின் வழித் தவறாது நடக்க வேண்டும் என்பதை பற்றியும் கூறுகிறது. அதனால் இக்காவியம் பாரத மகா காவியம் என்றும் கூறப்படுகிறது.

வெறும் கதையை மட்டும் வாசிப்பது என்றால் ஆறுமாத காலத்திற்குள் உங்களால் மகாபாரதத்தை வாசித்துவிட முடியும். ஆனால் அதிலுள்ள கவித்துவ அழகு, அறச்சிந்தனைகள், பண்பாட்டு சிந்தனைகள் ஆகியவற்றை ஆழ்ந்து படிப்பதற்கு நம்முடைய வாழ்நாள் போதாது.

ஆசான்களை அவமதித்தல், பெண்மையை சூறையாடுதல், வினை விதைப்பவனின் விதி பயன், தீய இடத்தில் இருந்தும் நற்குணம் கொண்டவனின் கதி என வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் மனிதன் என்ன செயல் செய்தால், அவனுக்கு என்ன பலன் விளைவிக்கப்படும்? என வாழ்வியலில் புரிதல் ஏற்பட, நம் மண்ணில் நிகழ்ந்தேறிய மாபெரும் இதிகாசம் தான் மகாபாரதம்.

மகாபாரதம், பல தரும நெறிகளை நமக்கு உணர்த்துகின்றது. தருமத்தை கடைபிடித்து வாழ வேண்டும். பல சந்தர்ப்பங்களில் தரும சங்கடங்கள் தோன்றி நம்மை நெறிதவற வைக்க பார்க்கும். அத்தகைய தரும சங்கடங்கள் விளையும்போது தீங்கை சிறிதும் எண்ணாது தர்மத்தை கடைபிடித்து பண்பால் உயர்ந்து விளங்க வேண்டும் என்பதை மகாபாரதம் பல இடங்களிலும் எடுத்துரைத்து நமக்கு வழிகாட்டுகின்றது.

குருச்சேத்திரப் போர் மகாபாரத காவியத்தில் ஒரு முக்கியமான நிகழ்வாகும். இப்போர் அஸ்தினாபுரம் அரியணைக்காக பங்காளிகளான கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் இடையே குருச்சேத்திரம் என்ற இடத்தில் நடைபெற்றது. இப்போரானது 18 நாட்கள் நடைபெற்றது.

இதிகாசங்கள் பெருங்கடலை போன்றவை. ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களை படித்தவர்கள் கூட மகாபாரதத்தை படிப்பதும், புரிந்து கொள்வதும் சாதாரண விஷயம் அல்ல. அதை எளிமைபடுத்தி உங்களுக்கு புரிந்து கொள்ளும் வகையில் கொடுத்து உள்ளோம். படிக்க தவறாதீர்கள்..!!

## வியாசர் பிறந்த கதை

வேத வியாசர் தான் மிகச்சிறந்த புராணமான மகாபாரதத்தை உருவாக்கி எழுதியவர். இவர் கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் கொள்ளுத்தாத்தா ஆவார். அத்தகைய சிறப்புகள் பெற்ற மகாபாரதத்தை உருவாக்கிய வேத வியாசர், பராசர மகரிஷிக்கும், சத்யவதி என்ற மீனவ பெண்ணுக்கும் பிறந்தவர். இவர் பிறந்த கதையை பற்றி கீழே காண்போம்.

இவருடைய தந்தை பராசர மகரிஷி. இவர்தான் முதல் புராணமான விஷ்ணு புராணத்தை இயற்றியவர் ஆவார். இவர் ஒரு முறை, யமுனை நதியின் அருகே பயணித்து கொண்டிருந்தபோது, நதியை கடக்க தன் மரப்படகில் பயனாளிகளுக்கு உதவி செய்து கொண்டிருந்த மீனவ குடும்பத்தை சேர்ந்த ஒரு இளம் பெண்ணை கண்டார். அந்த பெண்ணால் பராசர மகரிஷி முனிவர் ஈர்க்கப்பட்டார். அந்த பெண்ணின் அருகே சென்ற அவர், தன்னை அக்கரைக்கு அழைத்து செல்ல சொன்னார். இருவரும் மரப்படகில் அக்கரைக்கு செல்லும் வழியில் பராசர மகரிஷி, அவள்மீது தான் கொண்டுள்ள விருப்பத்தை வெளிப்படுத்தினார். அப்பெண்ணின் பெயர் சத்யவதி.

அவருடைய விருப்பத்திற்கு சத்யவதி முதலில் தயங்கினாலும், பராசர மகரிஷியின் தொடர் வற்புறுத்தலின் பேரில் வேறுவழியின்றி, என்னுடைய நிபந்தனைக்கு சம்மதம் தெரிவித்தால் நான் உங்கள் விருப்பத்திற்கு சம்மதிக்கிறேன் என்றாள். பராசர மகரிஷி, என்ன நிபந்தனை? கூறு என்று கேட்டார்.

சத்யவதி சொன்ன முதல் நிபந்தனையாவது, நம் இருவரையும் யாரும் காண கூடாது என்றாள்.

இரண்டாவது நிபந்தனையாவது, அவள் உடலில் இருந்து மீன் நாற்றம் வாசனையாக மாற வேண்டும் என்றும், நான் உங்களின் விருப்பத்தை நிறைவேற்றினாலும், நான் கற்புள்ளவளாகவே இருக்க வேண்டும் என்றாள்.

சத்யவதி கேட்ட வரத்தை பராசர மகரிஷி வழங்கினார்.

மூன்றாவது நிபந்தனையாக, தன் குழந்தை அறிவாளியாகவும், நன்கு படித்தவனாகவும், மீனவனாக இல்லாமல் ஒரு முனிவனாக இருக்க வேண்டும் என்ற வரத்தையும் கேட்டாள்.

இந்த நிபந்தனைகளுக்கு தலையசைத்த முனிவர், ததாஸ்து என கூறினார். சத்யவதி விதித்த நிபந்தனைகளின்படி நடந்து கொண்டார். பின்னர் இருவரும் அன்றைய தினம் ஒரு தீவில் இல்வாழ்க்கை நடந்தினர். அன்றைய தினம் சத்யவதி ஒரு மகனை பெற்றெடுத்தாள். அவர்தான் பின்னாளில் வேத வியாசர் என அழைக்கப்பட்டார். வேத வியாசர் கருமை நிறத்தில் இருந்ததால், கிருஷ்ணா என்ற பெயரை பெற்றார். மேலும், ஒரு தீவில் பிறந்ததால் அவருக்கு த்வைபாயனர் என்ற பெயரும் உண்டு. அதனால் வியாசா என்ற சிறுவனின் முழுப்பெயர், கிருஷ்ண த்வைபாயனர் வேத வியாசர் என்றானது. இதுவே மகாபாரதம் என்னும் மிகச்சிறந்த புராணமான மகாபாரதத்தை உருவாக்கிய வேத வியாசர் பிறப்பின் கதையாகும்.

## மகாபாரதத்தை எழுதிய விநாயகர்

மகாபாரதம் என்னும் இதிகாசத்தினை உலகத்திற்கு அளித்தவர் வியாசர் ஆவார். மகாபாரதம் என்பது ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்கின்ற வேதங்களையும் அடுத்து விளக்கக்கூடிய ஐந்தாவது வேதமாக, அனைவராலும் போற்றப்படுகின்ற அளவிற்கு இயற்றப்பட்டது ஆகும்.

இதில் மனித வாழ்க்கையில் ஏற்படக்கூடிய அனைத்து விஷயங்களையும் மிகத் தெளிவாகவும், அழகாகவும் கூறிய பெருமை வியாசருக்கு உண்டு. இதனை நூல் வடிவில் கொண்டுவர வேண்டும் என எண்ணம் கொண்டார் வியாசர். பிறகு வியாசருக்கு தாம் சொல்லச் சொல்ல இதனை யாரைக் கொண்டு எழுதச் செய்வது? என்கிற எண்ணம் தோன்றியது. அப்பொழுது வியாசருக்கு மனதில் தோன்றியவர் பிரம்ம தேவன்.

வியாசர், பிரம்ம தேவரை வைத்து மகாபாரதத்தை எழுதலாம் என நினைத்து பிரம்மனை மனமுருக வழிபட்டார். வியாசரின் வழிபாட்டினால் பிரம்மரும் அவர் முன் தோன்றினார். வியாசர் தன் எண்ணத்தினை பிரம்ம தேவரிடம் கூறினார்.

பிரம்மர் வியாச முனிவரிடம், நீங்கள் கணபதியை வேண்டிக் கொள்ளுங்கள். உங்களுடைய எண்ணம் ஈடேறத் துணைபுரிவார் எனக்கூறி மறைந்தார். அதன்பின் வியாச முனிவர் கணபதியை மனமுருக வேண்டினார். கணபதி, வியாசர் முன்பு தோன்றினார். வியாசர் தன் மனதில் இருக்கும் எண்ணத்தினை விநாயகரிடம் கூறினார். கணபதியும் அதற்கு ஒப்புக் கொண்டார். ஆனால் கணபதி ஒரு நிபந்தனையை விதித்தார். முனிவரே! பாரதத்தை நீங்கள் தங்குதடையில்லாமல் சொல்ல வேண்டும். எந்த காரணம் கொண்டும் இடையில் நிறுத்தக்கூடாது என்றார். வியாசரும் இதற்கு சம்மதம் தெரிவித்தார்.

பிறகு வியாசரும், ஒரு நிபந்தனையை விதித்தார். பெருமானே! தாங்களும், ஒரு விநாடி கூட நிறுத்தாமல் எழுத வேண்டும் என்றார். விநாயகரும் இதற்கு சம்மதித்தார். அதாவது தாம் சொல்லுகின்ற பாடலின் கருத்தின் பொருளை உணர்ந்தபடியே எழுதுதல் வேண்டும் என்பதாகும். இதற்கு விநாயகப்பெருமானும் சம்மதம் அளித்தார்.

ஒரு நன்னாளில், விநாயகப் பெருமானை முறைப்படி பூஜித்து வணங்கி, பாரத கதையை கூறத் துவங்கினார் வியாசர். வியாசர் பாடலாக சொல்ல, கணபதி பொருளினை யோசித்து யோசித்து எழுத துவங்கினார். வெள்ளம் போல் வியாசர் சொல்லி கொண்டிருக்க, அவரின் வேகத்துக்கு ஈடுகொடுத்து எழுதினார், கணபதி. ஒரு கட்டத்தில், விநாயகரின் எழுத்தாணியின் கூர் மழுங்கிப் போனது. உடனடியாக தனது வலக் கொம்பை (தந்தம்) ஒடித்து அதையே எழுத்தாணியாக உபயோகித்து, மகாபாரதத்தை எழுதி முடித்தார்.

இவ்வாறு மகாபாரத காவியம் உருவானது. இதனை தமது புத்திரரான சுகருக்கு வியாசர் கற்றுக் கொடுத்தார். சுகருக்கு உபதேசித்த பிறகு அவர் தம் சிஷ்யர்களுக்கு உபதேசித்தார். பின் நாரதர் மகாபாரத்தினை கற்று தேவர்களுக்கு தெரியப்படுத்தினார். இவ்வாறு மகாபாரதம் மனிதர்கள் இடையில் சென்று அடைந்தது.

## பாண்டவர்கள் மற்றும் கௌரவர்கள்

மகாபாரதம் படிக்க படிக்க படித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்கிற ஆர்வத்தை தூண்டக்கூடிய ஒரு இதிகாசம் ஆகும்.

மகாபாரதத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பகவத்கீதையை போதித்து வாழ்க்கையின் யதார்த்த நிலையை சுட்டிக்காட்டுகிறார். மேலும், மகாபாரதத்தில் உள்ள கதாபாத்திரங்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள நல்ல குணங்கள் எது? மற்றும் தீய குணங்கள் எது? என்பதை கதாப்பாத்திரங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

தீயவர்களின் சூழ்ச்சியில் சிக்கி நாட்டை இழந்தாலும், பின் முயன்று நாட்டை மீட்டெடுப்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது. தனக்கு உண்டான உரிமையை பெற எவ்வாறெல்லாம் பாண்டவர்கள் போராடுகிறார்கள் என்பது பற்றியும் தெரிந்துக் கொள்ள முடியும்.

துன்பம் வரும் சமயங்களில் கிருஷ்ணா!... என்று அழைத்தால் நம் துன்பத்தை போக்க பகவான் கிருஷ்ணர் ஓடி வருவார் என்று பெரியவர்கள் சொல்லிக் கேட்டிருப்போம். அதற்கு உதாரணமாக, மகாபாரதத்தில் திரௌபதி, பகவான் கிருஷ்ணர் மேல் கொண்ட பக்தியினால், கோவிந்தா..! என அழைத்தவுடன் கிருஷ்ணர் அவள் முன் தோன்றி அளித்த காட்சி மனதை நெகிழ வைக்கும். பிறந்த குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவரும் விரும்பி படிக்கும் இதிகாசம் என்றால் அது மகாபாரதம் தான் என்றால் மிகையாகாது.

## மகாபாரதத்தில் பாண்டவர்கள்

### தருமர் :

தருமர், பாண்டுவிற்கும், குந்திக்கும் மகனாக பிறந்தவர். இவர் பஞ்ச பாண்டவர்களில் மூத்தவர் ஆவார். இவர் துர்வாச முனிவரின் வரத்தின் காரணமாக குந்திக்கு எமதர்மன் மூலமாக பிறந்தவர். தருமர், குருச்சேத்திரப் போரில் பாண்டவர்களின் தலைவராக இருந்தவர். இவர் அஸ்தினாபுரத்தின் அரசர். இவர் சிறந்த நிர்வாகத்திறமை கொண்டவர்.

### பீமன் :

பீமன், பாண்டுவிற்கும், குந்திக்கும் இரண்டாவது மகனாக பிறந்தவர். இவர், வாயு பகவானுக்கும், குந்திக்கும் பிறந்தவர். பீமன் மிகுந்த வலிமையுடையவர். மேற்கு இந்தியாவில் பாயும் பீமா ஆறானது இவரது பெயராலேயே அழைக்கப்படுகிறது.

### அர்ஜுனன் :

அர்ஜுனன், பாண்டுவிற்கும், குந்திக்கும் மூன்றாவது மகனாக பிறந்தவர். கிருஷ்ணரின் நண்பன். அர்ஜுனன், வில் வித்தையில் சிறந்தவர். இவர், பாண்டவர் மற்றும் கௌரவர்களுக்கு குருவான துரோணரின் முதன்மையான சீடர் ஆவார்.

**நகுலன் :**

நகுலன், பாண்டுவிற்கும், பாண்டுவின் இரண்டாவது மனைவியான மாத்ரிக்கும் மகனாக பிறந்தவர். இவர் அஸ்வினி தேவர்களின் மூலமாகப் பிறந்தவர். நகுலன் மிகவும் அழகான தோற்றம் உடையவர். வாள் வீச்சில் சிறந்தவர். நகுலனும், சகாதேவனும் இரட்டையர்களாக பிறந்தவர்கள்.

**சகாதேவன் :**

சகாதேவன், பாண்டுவிற்கும், பாண்டுவின் இரண்டாவது மனைவியான மாத்ரிக்கும் மகனாக பிறந்தவர். பாண்டவர் ஐவரில் சகாதேவனே இளையவர் ஆவார். இவர் மிகுந்த புத்திக்கூர்மை உடையவர். நடக்கவிருக்கும் செயல்களை முன்கூட்டியே அறியும் ஞானம் படைத்தவர். சகாதேவன், வாள் வீச்சில் நகுலனை போல சிறந்தவர். இவர் அஸ்வினி தேவர்களின் மூலமாக பிறந்தவர். இவரும், நகுலனும் இரட்டையர்கள் ஆவர்.

**மகாபாரதத்தில் கௌரவர்கள்**

மகாபாரதத்தில் கௌரவர்களின் பிறப்பு என்பது திருதராஷ்டிரனுக்கும், காந்தார நாட்டு இளவரசியான காந்தாரிக்கும் பிறந்த நூறு மகன்கள் கௌரவர்கள் எனப்படுவர்.

மகாபாரதத்தில் கௌரவர்களில் முதல் மகனான துரியோதனன், பேராசையும், பிடிவாதமும் உடையவனாக வளர்ந்தான். அவனை அடுத்து பிறந்த துச்சாதனன் தீமையில் துரியோதனனை விட கொடுமையானவன். கௌரவர்கள் அனைவரும் செல்வ செழிப்போடு பிடிவாத குணம் கொண்டவர்களாக வளர்ந்தனர்.

**கங்காதேவியின் மகிழ்ச்சி**

இட்சுவாகு குலத்தை சேர்ந்த மன்னன் மகாபிஷக். மகாபிஷக் உலகை நல்லாட்சியுடன் ஆண்டு வந்தான். மகாபிஷக் செய்த புண்ணியச் செயல்களால், மகாபிஷக் இறந்ததும் தேவலோகம் அடைந்தான். மகாபிஷக் தேவர்களுடன் சேர்ந்து, பிரம்ம தேவரை வணங்கச் சென்றான். அப்பொழுது கங்கை நதி, கங்காதேவி வடிவில் அங்கு காட்சி அளித்தாள். அப்பொழுது காற்றினால் கங்காதேவியின் ஆடை சற்று விலகியது. இதைக்கண்ட தேவர்களும், ரிஷிகளும் நாணத்தால் தலைக் குனிந்து நின்றனர். ஆனால் மகாபிஷக், கங்கா தேவியின் அழகைக் கண்டு மோக வயப்பட்டான். மோக வயப்பட்ட மகாபிஷக், கங்கா தேவியை சற்றும் நாணமில்லாமல் பார்த்துக்கொண்டே இருந்தான். இதை பார்த்துக் கொண்டிருந்த பிரம்மன், மகாபிஷக் மீது கடும் கோபம் கொண்டான்.

தேவலோகத்தில் இருந்த மகாபிஷக்கை பார்த்து, நீ பூவுலகில் மனிதனாகப் பிறந்து, கங்காதேவியால் விரும்பத்தகாத செயல்களை சிலவற்றை சந்தித்து, துன்பமடைந்து சில வருடங்கள் கழித்து, நல்லுலகை அடைவாயாக என சபித்தார். அதன்பின் மகாபிஷக், பூவுலகில் பிரதீப மன்னனின் மகனாகப் பிறக்க நேர்ந்தது. பிரம்மதேவர் அவையில் தன்னை

பார்த்து மோக வயப்பட்ட மகாபிஷக்கை கண்டு, கங்காதேவியும் அவன்மேல் காதல் கொண்டாள். இதை நினைத்துக் கொண்டு திரும்பி வரும்போது கங்காதேவி அஷ்ட வசுக்களை சந்தித்தாள். (அஷ்ட வசுக்கள் என்பவர்கள் மனுவின் மைந்தனான பிரஜாபதியின் எட்டு மகன்கள் ஆவர். அவர்களின் பெயர்கள் தரா, துருவா, சோமா, அஹா, அனிலா, அனலா, பிரதியுஷா மற்றும் பிரபாசா ஆகும்.) அவர்கள் மனக்கவலையில் இருப்பதைக் கண்ட கங்காதேவி, தங்களின் மனக்கவலைக்கான காரணம் என்னவென்று கேட்டாள். அவர்கள் கங்காதேவியிடம், தேவி! வசிஷ்டருக்கு சினம் வரும்படி நடந்துக் கொண்டதால் அவர் எங்களை மனிதர்களாக பிறக்க வேண்டும் என்று சபித்து விட்டார்.

இதுதான் எங்களின் கவலைக்கான காரணம். தாங்கள், எங்களுக்கு பூமியில் தாயாகி, எங்களை பெற்றெடுக்க வேண்டும் என வேண்டினர். அதற்கு கங்கா தேவி, உங்களை மண்ணுலகில் பெற்றெடுக்க நான் தயார். ஆனால், அதற்கு நீங்கள் தந்தையாக விரும்புபவர் யார்? என கங்காதேவி கேட்டாள். தேவி! மண்ணுலகில் பிரதீப மன்னன் என்பவன் புகழுடன் திகழ்கிறான். அவனுக்கு சந்தனு என்ற மகன் பிறக்க போகிறான். அவனே எங்கள் தந்தையாக விரும்புகிறோம் என்றனர் வசுக்கள். இதைக்கேட்டு கங்காதேவியும் மகிழ்ச்சி அடைந்தாள். பிறகு வசுக்கள் வசிஷ்டரின் சாபம் நீண்டகாலம் இருக்கக்கூடாது. அதனால் நாங்கள் பிறந்தவுடன் தண்ணீரில் எறிந்து, எங்களின் ஆயுளை முடித்து விட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அப்பொழுது கங்காதேவி, உங்கள் கோரிக்கைக்கு ஒரு நிபந்தனை உள்ளது.

அதாவது, புத்திரப்பேறு கருதி, ஒரு மகனை மன்னரிடம் விட்டுவிட்டு, மற்றவர்களை நீங்கள் சொல்வது போல செய்கிறேன் என உறுதி கூறினாள், கங்கா தேவி. அதன்பின் வசுக்கள் மகிழ்ச்சியுடன் விடைபெற்றனர். ஒருநாள் கங்கை நதிக்கரையில் பிரதீப மன்னன் தியானம் செய்து கொண்டிருந்தான். அப்போது கங்காதேவி, நீரிலிருந்து கரையேறி பிரதீப மன்னன் முன்பு வந்து நின்றாள். தியானத்தில் இருந்த பிரதீப மன்னனிடம், மன்னா! உங்களுக்கு பிறக்கப் போகும் மகனுக்கு, நான் மனைவியாக விரும்புகிறேன் என்று கூறினாள். அதற்கு பிரதீப மன்னனும், அவ்வாறே ஆகட்டும் என்றான். பிரம்ம தேவனின் சாபப்படி, பிரதீபனின் மனைவிக்கு மகன் பிறந்தான். அவனுக்கு சந்தனு என்று பெயர் சூட்டினர். சந்தனு, இளமைபருவத்தை அடைந்தான். அனைத்துக் கலைகளையும் கற்று வல்லவனாக திகழ்ந்தான்.

## கங்காதேவியின் நிபந்தனைகள்

ஒருநாள் பிரதீப மன்னன், சந்தனுவை அழைத்து, மகனே! முன்பு ஒருநாள் நான் கங்கை நதிக்கரையில் தியானித்துக் கொண்டிருந்தபோது, தேவலோகத்து பெண் ஒருவள், என் மருமகளாக விரும்புவதாக கூறினாள். அதனால் அவள் உன்னைப் பார்க்க வருவாள். அப்பொழுது அந்தப் பெண்ணை நீ யார்? என்று கேட்காமல் அப்பெண்ணை ஏற்றுக்கொள்! இது என் கட்டளை எனக் கூறினான். பிறகு சில நாட்கள் கழித்து பிரதீப மன்னன், தன் மகனான சந்தனுவிற்கு முடி சூட்டி நாட்டிற்கு அரசனாக்கிவிட்டு, காட்டுக்கு தவம் மேற்கொள்ள சென்றுவிட்டான். சந்தனுவிற்கு வேட்டையாடுவது என்றால் மிகவும் பிடிக்கும். ஒருநாள் சந்தனு, காட்டில் வேட்டையாடிக் கொண்டிருக்கும்பொழுது, ஒரு அழகிய பெண் வருவதை பார்த்தான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தனர். பார்த்த நொடியில் இருவரும் காதல் கொண்டனர்.

பிறகு சந்தனு அப்பெண்ணை பார்த்து, பெண்ணே! உன்னை போன்ற அழகுடைய கன்னியை நான் இதுவரை என் வாழ்நாளில் பார்த்ததில்லை என்றான். மேலும் அப்பெண்ணிடம் சந்தனு, நான் இந்த பூவுலகில் மிகச்சிறந்த அரசன். உன்னை மணந்து கொள்ளும் தகுதி எனக்கு இருக்கிறது. ஆகையால், நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை. எனக்கு உன்னை மிகவும் பிடித்திருக்கிறது. நீ என்னை திருமணம் செய்து கொள்வாயா? என்று தயங்கியபடி கேட்டான். சந்தனு கூறிய வார்த்தைகளை கேட்டு, அப்பெண் (கங்காதேவி) வெட்கப்பட்டு தலை குனிந்தபடி மௌனமாக நின்று கொண்டிருந்தாள். கங்காதேவியின் மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்பதை உணர்ந்த சந்தனு, பெண்ணே! உன் மவுனத்தை கலைத்து நேரடியாக பதில் சொல், என்றான்.

அப்பெண் (கங்காதேவி) சந்தனுவிடம், மன்னா! உங்களை திருமணம் செய்து கொள்ள நான் சம்மதிக்கிறேன். ஆனால், இதற்கு சில நிபந்தனைகள் உண்டு. அதற்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும் என்றாள். என்னுடைய நிபந்தனைகளுக்கு நீங்கள் சம்மதித்தால், நம் இருவருக்குமான திருமண ஏற்பாடுகளை செய்யலாம் என்றாள். கங்கா தேவியின் அழகில் மயங்கிய சந்தனு, கங்காதேவி விதித்த நிபந்தனைகளை கேட்டான். மன்னா! என்னை பற்றி தாங்கள் எதுவும் கேட்கக்கூடாது. நான் என்ன செய்தாலும் நீங்கள் என்னை எந்த கேள்வியும் கேட்கக்கூடாது. நான் உங்களின் மனம் கஷ்டப்படும்படி நடந்து கொண்டாலும், என்னிடம் எந்த கேள்வியும் கேட்கக்கூடாது. உலகமே வெறுக்கும் காரியத்தை செய்தாலும், ஏன் இப்படி செய்தாய்? என்று கேள்வி கேட்கக்கூடாது என்று நிபந்தனை விதித்தாள்.

இந்த நிபந்தனைகளை கேட்ட சந்தனு மன்னனுக்கு, கங்காதேவி கூறிய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்ற குழப்பம் இருந்தது. ஆனால் கங்காதேவியின் மேல் கொண்ட ஆசையினால், அந்த நிபந்தனைகளுக்கு சரியென்று சம்மதம் தெரிவித்தான். அதன்பிறகு ஒரு நன்னாளில் சந்தனுவிற்கும், கங்காதேவிக்கும் திருமணம் நடந்தது. சந்தனு, கங்காதேவியிடம் இன்பமாக வாழ்ந்து வந்தான். பல ஆண்டுகள் கழித்து, கங்காதேவி! ஒரு மகனை பெற்றெடுத்தாள். பெற்றெடுத்த உடனே, அக்குழந்தையை கங்கையில் வீசினாள். அதைக் கண்டு மன்னன் அதிர்ச்சியடைந்தான். அப்போதுதான் திருமணத்திற்கு முன் கங்காதேவி விதித்த நிபந்தனைகள் சந்தனுவிற்கு நினைவுக்கு வந்தது. அதனால் ஏதும் பேசாமல் சூழ்நிலைக் கைதியாக இருந்தான். இதேப்போல் தொடர்ந்து ஏழு குழந்தைகளை கங்கா தேவி, கங்கையில் வீசினாள்.

## கங்காதேவி சந்தனுவை விட்டு பிரிதல்

கடைசியாக சந்தனு-கங்காதேவிக்கு எட்டாவதாக ஒரு குழந்தை பிறந்தது. இந்த குழந்தையையும் கங்கையில் வீசி விட்டால் என்ன செய்வதென்று பயந்த சந்தனு கங்காதேவியை பார்த்து, நீ யார்? எதற்காக இப்படி செய்கிறாய்? இந்தக் குழந்தையாவது கொல்லாமல் விட்டுவிடு என கூறினான். கங்காதேவி, மன்னா! நான் இந்த குழந்தையை கொல்லமாட்டேன். ஆனால், தாங்கள் என்னுடைய நிபந்தனைப்படி நடக்காமல், என்னை யார்? என்று கேட்டதால் இனி உங்களுடன் வாழ மாட்டேன் என்று கூறினாள். நான் போகும் முன், நான் யார்? என்பதை தங்களிடம் கூறிவிட்டு செல்கிறேன். நான் ஜன்கு மகரிஷியின் மகள். என்னுடைய பெயர் கங்காதேவி. தேவர்களுக்கு உதவுவதற்காகவே, நான் தங்களின்

மனைவியாக இருந்தேன். நமக்கு குழந்தைகளாக பிறந்தவர்கள் எல்லாம் புகழ் வாய்ந்த எட்டு வசுக்கள். வசிஷ்டரின் சாபத்தால், மனிதர்களாக பிறந்தனர். தங்களை தந்தையாகவும், என்னை தாயாகவும் அடைய விரும்பினர். அவர்களின் விருப்பம் நிறைவேறியது. அவர்களும் வசிஷ்டரின் சாபத்திலிருந்து சாப விமோசனம் அடைந்தனர்.

எட்டாவது மகனான இவன், பெரிய மகானாக திகழ்வான். இவனை மகனாக பெற்றதுடன் என்னுடைய கடமை முடிந்தது. தாங்கள், எனக்கு விடை தரவேண்டும் என்று கேட்டாள். கங்காதேவி கூறியதைக் கேட்ட சந்தனு, ஜன்கு மகரிஷியின் மகளே! புண்ணிய புருஷர்களான வசுக்களுக்கு வசிஷ்டர் எதற்காக சாபம் கொடுத்தார்? எட்டாவது மகனாக பிறந்திருக்கும் இந்த குழந்தை மட்டும் ஏன் மண்ணுலகில் வாழ வேண்டும்? இதற்கான காரணங்களை எனக்கு விளக்கமாக சொல் என்று கேட்டான். கங்கா தேவி, மன்னா! முனிவர்களில் சிறந்தவர் வசிஷ்டர். வசிஷ்டர், வருணனின் புதல்வர் ஆவார். வசிஷ்டர் மேருமலைச் சாரலில் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் நந்தினி என்ற பசு ஒன்றை வைத்திருந்தார். ஒரு நாள் தேவர்களாகிய இந்த எட்டு வசுக்களும், அவரவர் மனைவியருடன் மேருமலைச் சாரலுக்கு வந்தனர். அப்போது பிரபாசன் என்ற வசுவின் மனைவி, வசிஷ்டரிடம் இருந்த பசுவான நந்தினியை கண்டு, அந்த பசு தனக்கு வேண்டும் என்று கேட்டாள்.

மனைவியின் விருப்பத்தை அறிந்த பிரபாசன், இந்த பசு வசிஷ்ட மகரிஷிக்கு சொந்தமானது. இந்த பசு தெய்வத்தன்மை வாய்ந்தது. இந்த பசுவின் பாலைப் பருகும் மனிதர்கள் இளமையும், அழகும் குறையாமல், நீண்ட நாட்கள் வாழ்வார்கள் என்றான். இதைக் கேட்ட பிரபாசனின் மனைவி, தனக்கு மண்ணுலகில் ஜிதவதி என்று ஒரு தோழி இருப்பதாகவும், அவள் அழகும், இளமையும் குறையாமல் இருக்க, அவளுக்கு இந்த பசுவை அன்பளிப்பாக தர விரும்புவதாக கூறினாள். மனைவியின் விருப்பத்தை நிறைவேற்ற பிரபாசன், மற்ற வசுக்களுடன் நந்தினி என்னும் காமதேனுவை கன்றுடன் பிடித்துக் கொண்டு வந்து, தன் மனைவியிடம் கொடுத்தான். வசிஷ்டர், தன் தவத்தை முடித்துவிட்டு ஆசிரமத்திற்கு வந்தார். அப்பொழுது ஆசிரமத்தில் இருந்த பசுவும், கன்றுகுட்டியும் களவாடப்பட்டிருப்பதை கண்டு மிகவும் கோபங்கொண்டார். தன் பசுக்களை களவாடிச் சென்ற வசுக்கள் மனிதராக பிறக்க வேண்டும் என சாபமிட்டார். இதை அறிந்த வசுக்கள் வசிஷ்டரிடம் பசுவையும், கன்றையும் கொடுத்துவிட்டு, எங்களை மன்னிக்க வேண்டும் என அவரின் காலில் விழுந்து வேண்டினர்.

அப்பொழுது வசிஷ்டர், என் பசுவும், கன்றும் களவாட காரணமாக இருந்த பிரபாசன் தவிர மற்றவர்கள் விரைவில் சாப விமோசனம் பெறுவர். ஆனால் பிரபாசன் மட்டும் நீண்ட காலம் மண்ணுலகில் வாழ்வான். அவன் பெண் இன்பத்தை துறந்து, சந்ததி இன்றி வாழ்வான். அவன் அனைவருக்கும் நன்மைகள் செய்து, பேரும், புகழும் பெற்று சாஸ்திரங்களில் வல்லவனாக திகழ்வான் என்று வசிஷ்டர் கூறினார் என கங்காதேவி கூறினாள். பிறகு கங்காதேவி, வசுக்களில் ஒருவரான பிரபாசனை நான் என்னுடன் அழைத்துச் செல்கிறேன். இவன் பெரிவன் ஆன பின் தங்களிடம் ஒப்படைக்கிறேன். தாங்கள் அழைக்கும்போது நான் வருவேன் எனக் கூறிவிட்டு சந்தனுக்கு விடைக் கொடுத்து மறைந்தாள்.

## செம்படவனிடம் பெண் கேட்கும் சந்தனு

கங்காதேவி தன் எட்டாவது குழந்தையுடன் மறைந்தாள். அவன் தேவவிரதன் என்றும், காங்கேயன் என்றும் அழைக்கப்பட்டான். இவன் நற்குணங்களில் சிறந்தவனாக விளங்கினான். தன் மனைவியையும், குழந்தையையும் இழந்த சந்தனு, மிகுந்த துன்பப்பட்டான். அதன் பின், நாட்டாட்சியில் மிகுந்த கவனம் செலுத்தி வந்தான். அஸ்தினாபுரத்தை தலை நகரமாக கொண்டு அனைவரும் போற்றி புகழும் வண்ணம் அரசாட்சிப் புரிந்தான். நீதிநெறி தவறாதவனாகவும், இந்திரனுக்கு ஒப்பற்றவனாகவும், சினத்தில் எமனுக்கு ஈடாகவும், வேகத்தில் வாயு பகவானுக்கு ஈடாகவும், அனைத்து கலைகளிலும் சிறந்தவனாகவும், விருப்பு வெறுப்புகள் இன்றி நல்லாட்சி புரிந்து வந்தான். ஒருமுறை சந்தனு, காட்டில் வேட்டையாடி கொண்டிருக்கும் பொழுது கங்கை நதியைக் கண்டான். நதியில் நீர் குறைவாக ஓடுகிறதே. எதனால் நீர் பெருக்கெடுத்து ஓடவில்லை என எண்ணிக் கொண்டு இருந்தான்.

அப்பொழுது வாலிபன் ஒருவன், தன் அம்பு எய்தும் திறமையால் கங்கை நதியதை தடுத்து நிறுத்தவதை கண்டான். இதைப் பார்த்த மன்னன் சாந்தனு, உடனே கங்காதேவியை அழைத்தான். கங்காதேவி தன் மகனுடன் மன்னன் முன் தோன்றினாள். கங்காதேவி மன்னரிடம், மன்னா! இவன் நமது எட்டாவது மகன். அனைத்து கலைகளையும் நன்கு கற்றவன். இவன் தேவேந்தரனுக்கு இணையானவன். வசிஷ்டரின் வேதங்களையும், வேத அங்கங்களையும் நன்கு கற்றறிந்தவன். நம் மகனை தங்களிடம் ஒப்படைக்கிறேன் எனக் கூறிவிட்டு மறைந்தாள். தன் மகனை கண்ட சந்தனு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தான். பிறகு ஒரு நன்னாளில் தன் மகனுக்கு இளவரசு பட்டம் சூட்டினான். நான்கு ஆண்டுகள் கழிந்தது. ஒருமுறை மன்னன் சந்தனு, யமுனை நதிகரைக்கு சென்றான். அங்கு ஓர் அழகிய பெண்ணைக் கண்டான். அவளிடம், பெண்ணே! நீ யார்? இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்? எனக் கேட்டான்.

அப்பெண் மன்னா! நான் செம்படவப்(மீனவன்) பெண். எனது தந்தை செம்படவர்களின் அரசன் ஆவார். நான் இங்கு ஓடம் ஓட்டுகிறேன் எனக் கூறினாள். அப்பெண்ணின் அழகில் மயங்கிய மன்னன், அப்பெண்ணை தன்னுடைய மனைவியாக்கி கொள்ள விரும்பி அவளின் தந்தையை காணச் சென்றான். அப்பெண்ணின் தந்தையை கண்ட அரசன், அவனிடம் நான் தங்களின் மகளை மணமுடிக்க விரும்புகிறேன் எனக் கூறினான். அதற்கு அப்பெண்ணின் தந்தை, மன்னா! நான் எனது மகளை தங்களுக்கு மணமுடிக்க சம்மதிக்கிறேன். ஆனால் அதற்கு நிபந்தனை உண்டு என்றான். மன்னன், அந்த நிபந்தனை என்னவென்று கூறு. அந்த நிபந்தனையை என்னால் நிறைவேற்ற முடியாததாக இருந்தால் நான் வாக்குறுதி கொடுக்க மாட்டேன் என்றான். செம்படவன், மன்னா! என் மகளுக்கு பிறக்கும் குழந்தையே அரசனாக வேண்டும் என்றான். செம்படவனின் நிபந்தனையை ஏற்க முடியாததால் மன்னன் கவலையுற்று திரும்பினான்.

மன்னனால் செம்படவப் பெண்ணை மறக்க முடியவில்லை. அப்பெண்ணின் நினைவால் மிகவும் வாடி வருந்தினான். மன்னனின் உடல்நிலை சோர்ந்து காணப்பட்டது. தந்தையின் இந்நிலையைக் கண்ட தேவவிரதன், தந்தையிடம் சென்று, தந்தையே! தாங்கள் மிகவும் சோர்வுற்று காணப்படுகிறீர்கள். தங்களின் துன்பத்திற்கான காரணம் என்னவென்று கூறுங்கள்

நான் தீர்த்து வைக்கிறேன் என்றான். மகனிடம், தன் விருப்பத்தை சொல்ல வெட்கமடைந்த மன்னன், மகனிடம்! மகனே! நம் குல வாரிசாக நீ ஒருவனே இருக்கிறாய். நாளை உனக்கு ஏதேனும் நேர்ந்தால், நம் சந்ததி என்னவாகும். அதை நினைத்து நான் வருந்துகிறேன் எனக் கூறினான். (மகனிடம் செம்படவப் பெண் பற்றி எதுவும் கூறவில்லை) ஆனால் தேவவிரதன் தன் தந்தை ஏதோ மறைக்கிறார் என்பதை உணர்ந்தான். தந்தையின் தேரோட்டியிடம் கேட்டால் விவரம் தெரிந்து விடுகிறது என நினைத்து தேரோட்டியிடம் சென்றான் தேவவிரதன்.

## பீஷ்மரின் தியாகம்

தேவவிரதன், தேரோட்டியை அழைத்து தந்தையின் கவலைக்கான காரணத்தை கேட்டான். தேரோட்டி அரசே! தங்களின் தந்தை ஓடம் செலுத்தும் செம்படவப் பெண்ணை விரும்புகிறார். செம்படவ அரசனின் மகளின் பெயர் சத்தியவதி. அவர் அப்பெண்ணின் தந்தையிடம், தங்களின் மகளை எனக்கு மணமுடிக்குமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு செம்படவன், உங்களுக்கு மணமுடிக்க வேண்டுமானால் என் மகளின் குழந்தையே நாடாள வேண்டும் என நிபந்தனை விதித்தார். அந்த நிபந்தனையை ஏற்க முடியாமல் மன்னர் வருத்தத்துடன் திரும்பிவிட்டார் என்றான். தந்தையின் இந்நிலையைக் கண்ட தேவவிரதன், செம்படவ பெண்ணை எப்படியாவது தந்தைக்கு திருமணம் செய்ய வேண்டும் என எண்ணினான்.

உடனே கங்கை நதிக்கரைக்கு சென்று செம்படவ அரசனை சந்தித்தான். செம்படவ அரசன் தேவவிரதனை மரியாதையுடன் வரவேற்றான். தேவவிரதன் செம்படவனிடம், உங்களின் மகளை என் தந்தைக்கு திருமணம் செய்து தர வேண்டும். அதற்காக தான் இங்கு வந்துள்ளேன் என்றான். செம்படவன், அரசே! எனது மகளை தங்களின் தந்தைக்கு திருமணம் செய்ய வேண்டும் என்றால், எனது மகளின், குழந்தையே அரசாள வேண்டும். இந்த நிபந்தனை தங்களுக்கு சம்மதம் என்றால் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கிறேன் என்றான். தேவவிரதன், செம்படவ அரசே! உங்களின் மகளுக்கு பிறக்கும் மகனே நாடாளுவான். அவனே அரசுரிமை ஏற்பான் என நான் உறுதியளிக்கிறேன். நீங்கள் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்க வேண்டும் என்றான்.

செம்படவன், அரசே! நீங்கள் அரச குலத்தில் பிறந்தவர். நீங்கள் கொடுக்கும் வாக்குறுதியை மீற மாட்டீர்கள். உங்களின் மேல் எனக்கு முழு நம்பிக்கையும் உள்ளது. ஆனால் உங்களுக்கு பின்னால் வரும் சந்ததியினர் உங்களின் வாக்குறுதியை மீறலாம் அல்லவா? என்றான். அதற்கு தேவவிரதன், செம்படவ அரசே! நான் எனது அரசுரிமையை சற்றுமுன் துறந்துவிட்டேன். இப்பொழுது நான் சந்ததியும் துறக்க சபதம் மேற்கொள்கிறேன். இன்றுமுதல் நான் பிரம்மச்சாரிய விரதத்தை மேற்கொள்கிறேன். நான் உயிர் உள்ளவரை என் சந்ததி உற்பத்தி ஆகாது. இந்த தியாகத்தை நான் என் தந்தைக்காக செய்கிறேன். இது என் சத்தியம். இப்பொழுது என் மேல் எந்த சந்தேகம் இல்லாமல் உங்கள் மகளை என் தந்தைக்கு திருமணம் செய்து தர வேண்டும் என்றான்.

அதன்பின் செம்படவ அரசன், திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தான். தேவவிரதனின் இந்த சபதத்தையும், அவனின் மனஉறுதியையும் அனைவரும் போற்றி புகழ்ந்தனர்.

அன்றுமுதல் அனைவரும் தேவவிரதனை, பீஷ்மர் என்று அழைத்தனர். பீஷ்மர், பெரியோர்களின் ஆசியுடன் செம்படவப் பெண் சத்தியவதியை அழைத்துக்கொண்டு அரண்மனை வந்தார். செம்படவ பெண்ணை கண்ட சந்தனு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். அங்கு பீஷ்மர் ஏற்ற சபதத்தை அறிந்து சந்தனு வருத்தம் அடைந்தார். அதன்பின் சந்தனு, பீஷ்மருக்கு ஒரு வரம் அளித்தார். இம்மண்ணுலகில் எவ்வளவு காலம் நீ உயிருடன் இருக்க விரும்புகிறாயோ அவ்வளவு காலம் நீ உயிருடன் வாழ்வாய். எமன் உன்னை நெருங்கமாட்டான் என்றான்.

சத்தியவதிக்கும், சந்தனுக்கும் திருமணம் இனிதே நடைபெற்றது. சேதி நாட்டு அரசனான உபரிசரஸ் என்னும் மன்னனின் மகள் தான் சத்தியவதி. செம்படவ அரசனால் வளர்க்கப்பட்டவள். சந்தனு மற்றும் சத்தியவதிக்கு முதலில் சித்திராங்கதன் என்னும் மகன் பிறந்தான். அதன்பின் விசித்திரவீரியன் என்னும் மகன் பிறந்தான். சில வருடங்கள் கழித்து சந்தனு மரணம் அடைந்தான். அதன்பிறகு சித்திராங்கதனை நாட்டின் அரசனாக பீஷ்மர் முடிசூட்டினார். காந்தர்வ நாட்டின் அரசர் பெயரும் சித்திராங்கதன் ஆகும். அதனால் காந்தர்வ நாட்டின் அரசன், சித்திராங்கதன் என்னும் பெயரை மாற்றிக் கொள். அப்படி உன் பெயரை மாற்றிக் கொள்ளாவிட்டால் என்னுடன் போரிட வா என அழைப்பு விடுத்தான். இதனால் காந்தர்வ நாட்டின் அரசனுடன் போர் புரிய நேரிட்டது.

இருவருக்கும் நடந்த கடும் போரில் சந்தனுவின் மகன் சித்திராங்கதன் மாண்டான். சந்தனுவின் இரண்டாவது மகனான விசித்திரவீரியனை நாட்டின் அரசனாக பீஷ்மர் முடிசூட்டினார். சில நாட்கள் கழித்து பீஷ்மர், விசித்திரவீரியனுக்கு திருமணம் செய்து வைக்க விரும்பினார். அச்சமயத்தில் காசி நாட்டின் மன்னன், தன் மகள் மூவருக்கும் சுயம்வரம் நடத்துவதை அறிந்தார். காசி நாட்டின் மன்னன் மகள்களின் பெயர் அம்பை, அம்பிகை, அம்பாலிகை. உடனே பீஷ்மர் காசி நாட்டுக்கு சென்று சுயம்வரத்தில் கலந்துக் கொண்டார். சுயம்வரத்தில் பல நாட்டின் அரசர்களும் கலந்துக் கொண்டனர். அங்கு சில அரசர்கள் பீஷ்மரை பார்த்து, நரை கூடிய வயதில் உங்களுக்கு திருமண ஆசையா? எனக் கூறி ஏளனம் செய்தனர்.

இதனால் கடும்கோபம் அடைந்த பீஷ்மர், காசி மன்னனின் மூன்று மகள்களையும் வலுகட்டாயமாக இழுத்துச் சென்றார். இதை பார்த்த பல மன்னர்கள் பீஷ்மரை தடுக்க முயன்றனர். அவர்கள் அனைவரும் பீஷ்மரிடம் தோற்று போயினர். அப்பொழுது சௌபல நாட்டு மன்னன் சால்வன், பீஷ்மரிடம் கடும் போர் புரிந்தான். முடிவில் சௌபல நாட்டு மன்னன் சால்வன் பீஷ்மரிடம் தோற்று போனான். அதன்பிறகு பீஷ்மர், அப்பெண்களை தன் மகள்கள் போல் அழைத்துக் கொண்டு அஸ்தினாபுரம் வந்தடைந்தார். விசித்திரவீரியனுக்கு விரைவில் திருமணம் செய்யும் முயற்சியில் ஈடுப்பட்டார். அப்பொழுது அப்பெண்களில் ஒருவளான அம்பை, நான் சௌபல நாட்டு மன்னன் சால்வனை விரும்புகிறேன். நான் அவரையே திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன் எனக் கூறினாள்.